# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5-00

முரசு 05 ஒலி 242 ஆங்கீரச ஆடி 20 (04.08.1992) செவ்வாய்

★ ஐ. நா. அதிகாரிகள் விசாரிக்க முன்பே

## 132 அகதிகள் விமானம் மூலம் திருமலை வந்தனர்

132 தமிழ் அகதிகள் 13 குழந்தைகள் உட்பட நேற்று மாலை இந்திய எயர் லைன் விமானம் மூலம் சீனன்குடா வந்துசேர்ந்தனர். இரண்டாம் கட்டமாக இலங்கை திரும்பும் அகதிகளின் முதல் தொகுதியினரே நேற்று வந்துசேர்ந்தவர்களாவர். இவர்கள் உப்புவெளி புனர்வாழ்வு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அடுத்த தொகுதியினர் வியாழன் அன்று அழைத்து வரப்படுவர். இவ்வாறு வாரம் தோறும் இரண்டு தடவைகளாக இம்மாதத்தில் மொத்தம் 1080 பேர் அழைத்துவரப்படுவர். இதே சமயம் 15 ஆம் திகதி முதல் இராமானுஜம் கப்பல் மூலம் 15 ஆயிரம் பேர் மன்னார் அழைத்துவரப்படுவர். =04 ஆம் பக்கம் பார்க்க

# கடலில் கைதான மூன்று சிங்கள மீனவர் கடற் புலிகளால் நேற்று விடுதலை

## செஞ்சிலுவை பிரதிநிதி பொறுப்பேற்பு

இவ்வாண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி தாளையடி கடற் பகுதியில் வைத்து கடற்புலிகளால் பிடிக்கப்பட்ட ஆறு சிங்கள மீனவர்களில் மூவர் நேற்றுப்பிற்பகல் விடுவிக்கப்பட்டனர்.

குருநகரில் உள்ள வலிகாமம் கிழக்கு கடற்புலிகள் பிரதேச அலுவலகத்தில் வைத்து பிற்பகல் 1.30 மணியளவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரதிநிதி ஜோன் பௌன்சுவாவிடம் மீனவர்கள் சங்க பிரதிநிதிகள் முன்னிலையில் இம்மூன்று மீனவர்களும் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்புலிகள் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மறவன் இம்மூவரையும் செஞ்சிலுவைப் பிரதிநிதியிடம் ஒப்படைத்தார்.

திருகோணமலை 4 ஆம் கட்டையைச் சேர்ந்த ஜோன் பவுல் மாரசிங்க (52), ரணதுங்க ஆராய்ச்சிகே ரூபசிங்க (46), கொடிப்பில சூரிய ஆராய்ச்சிகே சிறிசேன (50) ஆகியோரே விடுவிக்கப்பட்ட மீனவர்களாவர்.

இவர்கள் மாத்தறையைச் சேர்ந்தவர்கள் எனவும் திருகோணமலை 4 ஆம் கட்டையில் குடியேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (16)

### வீரச்சாவு

நித்தியவெளிடை பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் லெப். இளையவாணன் (ஜோசப் ஜெயசந்திரன் ஒடிசுப்டான்), லெப். உலகேஸ்வரன் (தே. மோகைசரமுவணாறு) வீரச்சாவு அடைந்தனர்.

### தேவர் உரை

இம்மாதம் 1 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையின் யாழ் மாவட்டச் செயலகத்தினர் நடத்திய மாதாந்தக் கலை விழாவின் போது விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் துணைப் பொறுப்பாளர் திரு தேவர் ஆற்றிய உரை நாளைய முரசொலியில் முழுமையாக வெளியிடப்படும்.

## நல்லூர்க் கந்தன் உற்சவம் நேற்று ஆரம்பமானது

நல்லூர்கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நேற்று காலை சரியாக 10 மணிக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடை சூழ கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

கோவிலின் உள்வீதியிலும், வெளிவீதியிலும் பெருந்தொகையான பக்தர்கள் கூடியிருந்ததைக் காணமுடிந்தது.

தீவுப்பகுதியில இருந்து இடம் பெயர்ந்த மக்களும், வலிவடக்கு பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் மக்களும் கோவிலில் பெருவாரியாக கலந்துகொண்டனர்.

வழமைபோல் சுகாதார பணிகளை மாநகரசபை கவனிக்கிறது. களவுகள், கைது வறவிட்ட சிறார்கள், போக்குவரத்து பாதுகாப்பு போன்ற விடயங்களை காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனர். (47)

## பரீட்சை முடிவுகள் கப்பலில் வரவில்லை

நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த ஜயண கப்பலில் 1991 ஆம் ஆண்டிற்கான க. பொ. த உயர்தர பரீட்சையின் பெறுபேறுகள் எடுத்து வரப்படவில்லை என தெரியவருகிறது.

ஆனால் இப்பரீட்சையின் பெறுபேறுகள் விமானம்மூலம் கொழும்பிலிருந்து பலாலிக்கு எடுத்து வரப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 47

## பரீட்சை வினாத்தாள்கள் விமான மூலம் வரும்

யாழ். மாவட்டத்தில் க. பொ. த. உயர்தர பரீட்சை எதுவித தடையுமின்றி நடைபெற்றுக்கொண்டிருப்பதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பரீட்சைக்குரிய இரண்டாம் கட்ட தொகுதி வினாத்தாள்கள் இன்று அல்லது நாளை பலாலிக்கு எடுத்துவரப்படலாம் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

பின்னர் இவ் வினாத்தாள்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படும் எனவும் மேலும் தெரி...

## புலிகளின் அதிரடி 14 படையினர் பலி

மட்டக்களப்பில் நேற்றுக் காலை இராணுவ ரோந்து அணிமீது விடுதலைப்புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 14 இராணுவத்தினர் பலியானதாக நேற்று கூட்டுப்படை தலைமையகம் அறிவித்தது.

மட்டக்களப்பு ஆயித்தியமலைக்கும் ரெதியனாவுக்கும் இடையில் காட்டுப்பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீதே புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் படையினருக்கு உதவ ஹெலிகொப்டர் அழைக்கப்பட்டதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

இறந்த படையினர் தொகை 7 என முன்னர் அறிவிக்கப்பட்டபோதிலும் பின்னர் 14 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

## அல்லிப்பளை ஊடாக படகுச் சேவை

குடாநாட்டுக்கு இருந்து வெளிமாவட்டங்களுக்கும், இதனால் குடாநாட்டில் பொருட்களின் விலைகளில்...

★ கடற்புலி மாவட்ட அரசியல் பொறுப்பாளர்

## தமிழ் மீனவர்களின் விடுதலையை எதிர்பார்க்கின்றோம்

சிங்கள மீனவர்கள் மூவரையும் மனிதாபிமான முறையில் தலைவர் பிரபாகரனின் பணிப்பின் பேரில் நாம் விடுவிக்கிறோம்.

இவ்வாறு சிங்கள மீனவர்களின் விடுவிப்பு வைபவத்தில் உரையாற்றிய கடற்புலிகள் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மறவன் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், நாம் மனிதாபிமான முறையில் சிங்கள மீனவரை விடுதலை செய்வதுபோல கடலில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் மீனவர்களை விடுதலை செய்யவேண்டும்.

இதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் தம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இவ்வைபவத்தில் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதியும் கலந்துகொண்டார். 16

## விடுதலை பெறுவோம் என நம்பியிருக்கவில்லை

1974 ஆம் ஆண்டு முதல் கரிசல் தங்கியிருந்து நாங்கள் கடற்... ஆராய்ச்சிகே ரூபசிங்க தமிழில் தெரிவித்தார்.

இப்பரீட்சைக்குரிய இரண்டாம் கட்ட தொகுதியினர் தான் இன்று அல்லது நாளை விமானம் மூலம் பலா... யாழ்ப்பாணம் எடுத்துவரப் படும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது (47)

# மருத்துவர் போராட்டத்தில் ராமதாஸ் கைது

நேற்று தமிழகத்தில் நடைபெற்ற மருத்துவர்களின் வேலை நிறுத்த போராட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் ராமதாஸ் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டார்.

சர்ச்சைக்குரிய ஸ்ரீ ராமசந்திரா மருத்துவமனை முன்பாக ராமதாசும் அவரின் கட்சி தொண்டர்கள் பலரும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் பொலிஸார் அவர்களை கைது செய்தனர்.

இதேசமயம் சென்னை அருகிலுள்ள போரூர் மருத்துவ கல்லூரி நோக்கி ஊர்வலமாக சென்ற பெருந்தொகை பாட்டாளி மக்கள் கட்சி தொண்டர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

# மருத்துவர்கள், மாணவர்கள் தமிழகம் எங்கும் வேலை நிறுத்தம்

சென்னை ஸ்ரீராமசந்திர மருத்துவக் கல்லூரியை தனியார் மயமாக்குவதை எதிர்த்து நேற்று தமிழகத்தில் மருத்துவர்கள் பரவலாக வேலை நிறுத்தத்தில் பங்குபற்றினர். இதனால் பல பகுதிகளிலும் மருத்துவ சிகிச்சைகள் பாதிக்கப்பட்டன. சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்களும் மாணவிகளும் கல்லூரிக்கு வெளியே கோஷங்களை எழுப்பி போராட்டம் நடத்தினார்கள்.

எனினும் இந்த வேலை நிறுத்தம் வெற்றியளிக்கவில்லை என தமிழக அரசு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்கும், வெளிமாவட்டங்களில் இருந்து குடாநாட்டுக்கும் உணவுப் பொருள்களும் ஏனைய பொருள்களும் அல்லிப்பளை கடல் படகுச்சேவை மூலம் அனுப்பப்படுகின்றன.

இதனால் குடாநாட்டில் பொருள்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்படுவதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

அல்லிப்பளை கிளாலிக்கு அருகில் உள்ள சிறு துறை எனவும் தெரிவிக்கப்படுகிறது

# கிளாலியில் பயணிகளிடம் திருடர்கள் கைவரிசை

கிளாலி ஊடாக வரும் பயணிகளிடம் திருடர்களின் தொல்லை அதிகரித்து வருவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

பயணிகள் எவ்வளவோ கஷ்டத்துக்கு மத்தியில் களைத்து இளைப்பாறும் போது சற்று அயர்ந்ததும் கவலையீனமாகவும் இருந்து விட்டால் திருடர்கள் தமது கைவரிசையைக் காண்பிக்கின்றனராம்.

இவ்வாறு பல பயணிகள் தமது பொருள்களை பறிகொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிளாலியில் பயணிகள் குடிநீர் இன்றி அவதியுறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அங்குள்ள கடைகளில் உணவு உண்பவர்களுக்கே சிறிய அளவு நீர் வழங்கப்படுகிறது. (56)

## குளம் அமைத்து - நீர் வளம் பெருக்குவோம்

1974 ஆம் ஆண்டு குருநகரில் தங்கியிருந்து நான் கடற்றொழிலில் ஈடுபட்டேன். அப்பொழுது இருந்த அமைதியான நிலைமை தற்போது யாழ்ப்பாணத்தில் காணப்படுவதில்லை.

இவ்வாறு நேற்று விடுவிக்கப்பட்ட சிங்கள மீனவர்களில் ஒருவரான ரணதுங்க ஆராய்ச்சிகே ரூபசிங்க தமிழில் தெரிவித்தார்.

எம்மை பிடித்த நாளில் இருந்து இன்று வரை விடுதலைப் புலிகள் எதுவித குறையுமின்றி நன்கு கவனித்தனர். எம்மை அவர்கள் 'ஐயா' என்று மரியாதையாக அழைத்தனர்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

# குருநகர் மீனவர்களையே விடுவிப்பதாக மக்கள் எண்ணினர்

சிங்கள மீனவர்களின் விடுதலை வைபவம் நேற்று குருநகரில் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது குருநகர் பகுதி மீனவர்களின் குடும்பங்கள் தமது உறவினர்களையே சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் படையினரிடம் இருந்து மீட்டு வந்து விடுவிப்பதாக எண்ணிவிட்டனர்.

ஆனால் இவர்களின் நிலைமையை அறிந்த கடற்புலிகள் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மறவன் உண்மைநிலையை விளக்கியதையடுத்து அவர்கள் சென்றனர் 16

# இராணுவ டாங்கிகளை ஜேர்மனி அழிக்கிறது

1990 இல் நேட்டோ அமைப்பிற்கும் முன்னாள் வார்சோ அமைப்பிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஆயுதக் குறைப்பு ஒப்பந்தப்படி ஜேர்மனி தன்னிடமுள்ள பெரும்பகுதி இராணுவ டாங்கிகளை அழிக்க ஆரம்பித்துள்ளது.

இவ்வொப்பந்தப்படி ஆயுத அழிப்பில் முதலில் இறங்கியுள்ள நாடு ஜேர்மனி தான் எனக் கூறப்படுகிறது.

...நிலைத்தல் இந்திய - பாகிஸ்தான் எல்லை பகுதியில் பாகிஸ்தான் நேற்று முன்தினம் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தியதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

முஸ்லிம் பிரிவினைவாதப் போராளிகள் போரிட்டுவரும் இப் பகுதியில் பாகிஸ்தான்

...மேன் இந்தியச் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்திய - பாகிஸ்தான் கட்டுப்பாட்டு எல்லையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பாகிஸ்தான் துருப்பினர் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக இந்திய அதிகாரி ஒருவர் கூறினார்.

...3 மணிக்கு கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தில் கொண்டாடப் படவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. பொ. ஸ்ரீகந்தராசா, கொழும்புத்துறை இ. ம. வி. அதிபர் கா. கணேசதாசன் ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்.

கட்டுரை, பேச்சு, வினாவிடைப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில்களும் அங்கு வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் மேற்கொண்டுள்ளது. 47

மெய்யகண்டான் மகா வித்தியாலய மாணவர்கள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கல்வி கற்பதை அடுத்து அரசாங்க அதிபரின் விசேட பணிப்பின் பேரில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் தற்காலிக கொட்டகை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இக்கல்லூரியில் 100 × 20 அடி நீள அகலமான தற்காலிக கொட்டகை அமைப்பதற்கு 54 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 18

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் அனுமதிப் பத்திரமில்லாத துப்பாக்கிகள் வைத்திருந்தமை பயங்கரவாதத்திற்கு உதவி புரிந்தமை போன்ற ஆறு குற்றச்சாட்டுகளின் பேரில் மாத்தறை மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்த வழக்கில் எதிரியாகக் குற்றம் சுமத்தப்பட்ட தெரமலை வினாரா பிக்குவான சிறீசித்தார்த்த தேரோ விடுதலை செய்யப்பட்டார்.

## 21 மீனவர் காணாமல் போயினர்

தென்னிலங்கை கடற்பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடலில் காணாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினர் இவர்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பெயரில் மாற்றம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துணை அமைப்புக்களில் ஒன்றாகச் செயற்பட்டுவரும் தமிழீழ ஆய்வு நிறுவனம் தமிழீழ பொருள்மிய மேம்பாட்டுக் கழகம் (TAMIL EELAM ECONOMIC DEVELOPMENT ORGANISATION - TEEDOR) எனப் பெயர் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

தமிழீழப் பொருள் வளங்களை இனங்கண்டு, ஆய்வு செய்து முடிவுப் பொருளாக்குவதிலும், உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குவதிலும் தமிழீழப் பொருள்மிய (பொருளாதார) மேம்பாட்டிற்கான திட்டமிடல், சந்தைப்படுத்தல், தொழில்நுட்பம், பயிற்சி, வர்த்தகம் எனும் இன்னோரன்ன துறைகளில் வழிகாட்டும் நடவடிக்கையிலு் தமிழீழ ஆய்வு நிறுவனம் கடந்த காலத்தில் சேவையாற்றி வந்தது.

தற்பொழுது இந் நிறுவனத்தின் பரப்பெல்லை தமிழீழத்திற்கான தனித்துவமான பொருள்மியக் கட்டமைப்பை உருவாக்குவதாக இருக்கையில் கடந்த காலச் செயற்பாடுகளைத் துரித கதியில் விரிவாக்கஞ் செய்ய வேண்டியுள்ள இன்றைய நிலையில் இந்த நிறுவனத்திற்குத் தமிழீழ பொருள்மிய மேம்பாட்டுக் கழகம் எனும் பொருத்தமான தூய தமிழ்ப் பெயர் சூட்டப்பட்டுள்ளது எனத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

## கொள்ளைப் பொருட்கள் மீட்பு

மருதானை, கொட்டாஞ்சேனைப் பகுதியில் உள்ள வீடுகள் சிலவற்றில் சமீப காலத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக வாலிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான கொள்ளைப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

# தேயிலைத் தோட்டத்துறையில் சிங்கள இளைஞர்களுக்கு பயிற்சி

தேயிலைத் தோட்டத்துறையில் சிங்கள இளைஞர்களுக்கும் போதிய பயிற்சியினை வழங்க அரச நடவடிக்கை எடுத்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பெருந்தோட்டத் துறையில் பரம்பரை, பரம்பரையாக மலையகத் தமிழர்களே தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களாக இருந்து வருகின்றனர்.

இப்புதிய திட்டத்தின் கீழ் மலையகத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளைச் சேர்ந்த சிங்கள இளைஞர்களுக்கு தேயிலைத் தோட்டத்துறையில் பயிற்சி வழங்கி பின்னர் பெருந்தோட்டங்களில் அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தேயிலைத் தோட்டத்துறையில் சிங்கள இளைஞர்களுக்கு தேசிய பயிலுநர் சபை, பெருந்தோட்டத்துறை அமைச்சு என்பன இணைந்து புதிய பயிற்சித் திட்டமொன்றை வகுத்துள்ளன.

முதற்கட்டமாக 1500 பேருக்கு இப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இனிமேல் தோட்டத்துறையில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு இப் பயிற்சி பெற்றவர்களையே முன்னுரிமை அடிப்படையில் நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

★ யாழ்.மாவட்டத்தில் பாதிப்புற்றோருக்கு

# நிவாரணமாக வழங்கப்பட்ட கடனுக்கு

# 3 வீத பாதுகாப்புவரி அறவிட பணிப்பு!

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு தமது உடைமைகளைத்திருத்துவதற்கென ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வு புனர் நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் கடன்உதவி பெற்றோரிடமிருந்து மூன்று சத வீத வட்டியை பாதுகாப்பு வரியாக அறவிடுமாறு கொழும்புத் தலைமையகத்தினால் யாழ். வங்கி நிர்வாகத்திற்குப் பணிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் மாதாந்தம் 1500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறுபவர்களுக்கு தமது உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதங்களைத்திருத்த 50 ஆயிரம் ரூபா முதல் ஒன்றரை லட்சம் ரூபா வரை வங்கிக் கடன் வசதி வழங்கப்பட்டிருந்தது.

யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சுமார் 5000 வீடுகளிற்கு இக்கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

இவ்வாறு வழங்கப்பட்ட கடன்களுக்கு பெறுமதி வைகாசி முதல் அறவிடப்படும் வட்டியிலேயே 3 சத வீதத்தைப் பாதுகாப்பு வரியாக அறவிடுமாறு யாழ் மாவட்ட வங்கிகள் பணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் 1983—1987 வரையிலான காலப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளின் போது ஏற்படுத்தப்பட்ட சேதங்களுக்கு நிவாரணமாகவே மிகக் குறைந்த வட்டி வீதத்தில் இக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிவாரணமாக வழங்கப்பட்ட இக்கடன்களுக்கு பாதுகாப்பு வரி அறவிடுவது முழுக்க முழுக்க அநீதமான ஒரு நடவடிக்கையென பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

★ சன்மார்க்க சபை கண்டனம்

## மக்களைக் குண்டுவீசிக் கொல்ல

## அவர்களிடமே பணம் அறவிடுவதா?

ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்புற்றோருக்கு வழங்கப்பட்ட கடனுக்கு 3 சத வீத வட்டியை பாதுகாப்பு வரியாக அறவிட முடிவெடுக்கப்பட்டுள்ளதை குரும்பசிட்டி சன்மார்க்கசபை கண்டித்துள்ளது.

"யாழ் மாவட்ட மக்களை பொறுத்தவரை இன்று அவர்கள் மிகக் குறைந்தளவு பாதுகாப்பு உத்தரவாதம் கூட இல்லாது வாழ்க்கை நடத்துகின்றனர்.

கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்கள், ஷெல் தாக்குதல்களின் மத்தியில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இம் மக்களிடம் பாதுகாப்புவரி அறவிடத் தீர்மானிக்கப்பட்டிருப்பது எமக்கு அதிர்ச்சி அளிக்கிறது. உண்மையாக நோக்கினால் எமது மக்களைக் குண்டு வீசியும் ஷெல் அடித்தும் கொல்வதற்கு எம் மக்களிடமே பணம் அறவிடும் ஒரு நடவடிக்கையாகவே இதைக் கருத வேண்டியுள்ளது" என இச்சபை இது குறித்து யாழ் அரச அதிபரூடாக நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

புனர்வாழ்வுக் கடன்களுக்கு பாதுகாப்புவரி அறவிடுவதை நிறுத்துமாறும் சன்மார்க்க சபை நிதி அமைச்சின் செயலாளரைக் கேட்டுள்ளது.

## நான்கு உழவு இயந்திரங்களில் பற்றறி, உதிரிப் பாகங்கள்!

வடக்கிற்கு பெருமளவு ரோச் பற்றறிகள், மோட்டார் சைக்கிள் உபகரணங்கள் என்பவற்றை எடுத்து வர எடுக்கப்பட்ட முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வவுனியா ஈரப் பெரியகுளம் இராணுவ முகாமில் இக்கடத்தல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

நான்கு உழவு இயந்திரப் பெட்டிகளுக்குள் இவை மறைத்து வைத்து எடுத்து வரப்பட்டபோதே அகப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## தென்னாபிரிக்காவில் கலவரம்: நேற்று மட்டும் 13 பேர் பலி!

தென்னாபிரிக்காவின் பல பகுதிகளிலும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அங்கு பதற்றம் நிலவுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்க தேசிய காங்கிரசும் அதன் நேசக் கட்சிகளும் அங்கு இன்று வரை வேலை நிறுத்தப் போராட்டமொன்றையும் ஆர்ப்பாட்டங்களையும் ஏற்பாடு செய்துள்ளன. இவற்றிற்கு எதிரான இன்காதாச் கட்சியும் அனைத்து ஆபிரிக்கான் காங்கிரசும் இதில் பங்கேற்கவில்லை. இதுவே இந்த மோதல்களுக்கு காரணம்.

நேற்றைய மோதலில் 13 பேர் கொல்லப்பட்டனர். நிலைமையை அவதானிக்க மத்தியஸ்தர் குழு ஒன்று அங்கு சென்றுள்ளது.

## இஸ்ரேலிய அமைச்சரவைக்கு இரு அரேபியர்கள் நியமனம்!

இஸ்ரேல் நாட்டில் இரு அரேபியர்கள் துணை அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் பிரதமர் இந்த அரேபியர்களை அமைச்சர்களாக நியமித்துள்ளார்.

இவர்களில் ஒருவர் சுகாதாரத் துறை அமைச்சராகவும், மற்றையவர் துணைப் பிரதமராகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

கடந்த 19 வருடங்களில் அரேபிய இனத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் இஸ்ரேலிய அமைச்சரவையில் உயர் பதவியில் அமர்த்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமது அரசு- இஸ்ரேல் உறவுக்கும், மத்திய கிழக்கு அமைதிக்கும் உதவ போவதாகப் புதிய அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

## இராணுவத்தலைமை அதிகாரியாக பாலரட்ணராஜா நியமனம்!

இலங்கை இராணுவத்தின் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் வை.பாலரட்ணராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இப் பதவியை முன்னர் வகித்துவந்த மேஜர் ஜெனரல் ஸ்டான்லி சில்வா ஓய்வு பெற்றதையடுத்து இந்தப் பதவி பாலரட்ணராஜாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி இந்த நியமனத்தை வழங்கினார்.

80 ஆயிரம் பேரைக் கொண்ட இராணுவப் படையின் இராணுவத் தளபதிக்கு அடுத்ததாக இந்த இராணுவத் தலைமை அதிகாரி பதவி அமைந்துள்ளது.

இராணுவத் தளபதி விடுமுறையில் சென்றாலோ அல்லது ஓய்வுபெற்றாலோ இப்பதவியை வகிப்பவரே இராணுவத் தளபதியாக நியமிக்கப்படுவது இராணுவ மரபாகும்.

## 7 மாத காலத்தில் மட்டும் 3 லட்சம் பேருக்கு சிகிச்சை!

## நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் 1992

### முதலாம் திருவிழாவின் தத்துவம்

உலகத்துக்குக் கருத்தாவாகிய சிவபெருமான் அண்டம் (உலகம்), பிண்டம் (உடம்பு) இரண்டையும் தத்துவங்கள் மூலமாகவே நடத்துகின்றான்.

தத்துவங்கள் முப்பத்தாறாகவும், தொண்ணூற்றாறாகவும் நம் சைவசமயத்தில் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவை உள் நிலைத் தத்துவங்கள், புறநிலைத் தத்துவங்கள் என இரண்டாக வகுக்கப்படும்.

சிவதத்துவம் (5), வித்தியா தத்துவம் (7), ஆன்ம தத்துவம் (24), புறநிலைக் கருவிகள் (60) என்பனவே தொண்ணூற்றாறு தத்துவங்களுமாகும்.

ஆன்மாவுக்குச் சிவம் தனது சுத்தமாயையூடாக வழங்கும் உடம்புகளை தூல உடம்பு, சூக்கும உடம்பு என இருவகைப்படும் இவற்றுள் தூல உடம்பாவது பருவுடம்பு அஃதாவது கண்ணுக்குப் புலனாகின்ற "சரீரம்" குலம், பிறப்பு, உயர்வு, தாழ்வு முதலியவைகளால் அபிமானம் (பற்று) செய்வதற்கு இடனாய், மண், நீர், நெருப்பு, காற்று, வெளி ஆகிய பஞ்சபூதங்களின் பரிணாமமாய் ஆக்கப்பட்டுள்ளது பரிணாமம் = உருத்திரிதல் பூதபரிணாமம், பூதனா சரீரம் எனவும் சொல்லப்படும்.

இந்தத் தூல சரீரத்தை நீக்குவதாகிய உண்மையைப் புலப்படுத்தும் வகையில் முதலாம் திருவிழா நடைபெறுகின்றது.

அதாவது, "இந்தத் தூல சரீரம் நான் அல்ல, நான் ஆன்மா" என்னும் உண்மை முதலாம் திருவிழா மூலம் உணர்த்தப்படும்.

(ஆதாரம் :- சைவசமய சிந்தாமணி)

## கந்தன் உற்சவ காலத்தில் நல்லை ஆதீனத்தில்

நல்லைக் கந்தன் திருவிழாக் காலங்களில் நல்லை ஆதீனத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள்:-

அதிகாலை 5 மணிக்கு திருமுறை வீதி பஜனை.

காலை 9 மணிக்கு சமய தீட்சை

மாலை 4 மணிக்கு புராண படலம். (கந்தபுராணம்)

மாலை 3 மணிக்கு முதல் இலக்கியங்கள், தொடர் சொற்பொழிவு நிகழ்த்துபவர்: சௌரவணிமுத்து இயாகராசா.

தேர்த்திருவிழா அன்று புராண படலம் (சூரசங்காரம்)

21-08-92 அன்று ஆதீன 26 வது ஆண்டு பீடாரோகண விழா என்பன இடம்பெறும்.

## நைஜீரிய பெண்மணிக்கு இலங்கையில் 7 வருட சிறை

நைஜீரியாவைச் சேர்ந்த 30 வயதுப் பெண்மணி ஒருவருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை 7 வருடகால கடூழியச் சிறைத் தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

போதை வஸ்துக் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் இவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

## ஈராக்கின் ஊடுருவல் ஆபத்து இன்னமும் நீங்கிவிடவில்லை

ஈராக்கிற்கும் அமெரிக்க நேச நாட்டுப் படைகளுக்குமிடையே நடந்த போர் நிறைவு பெற்ற இரண்டாண்டு என்றும் குவைத் அரசு கூறியுள்ளது.

இதனிடையே அமெரிக்கப் படைகளும் குவைத் படைக

பிரதமராகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

புதிய அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

## 3 லட்சம் பேருக்கு சிகிச்சை!

யாழ். போதனா வைத்தியசாலையில் இவ்வாண்டின் முதல் ஏழு மாத காலத்தில் மட்டும் மூன்று இலட்சம் நோயாளர்கள் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களை விட இக் காலப் பகுதியில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு இவ் வைத்தியசாலையில் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நோயாளர்கள் வட மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து சிகிச்சைக்காக இங்கு வந்திருந்தனர்.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற வருவோரின் தொகை கடந்த மாதத்திலிருந்து தினமும் அதிகரித்து வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (07)

## இன்றைய தெய்வீக இசையரங்கு

சிறிமுருகன் தண்ணீர்ப் பந்தல்

மாலை - 6.00 - 8.00 வரை

| பாட்டு | வயலின் | மிருதங்கம் |
|---|---|---|
| பார்வதி சிவபாதம் | | |
| மெல்லிசைவாணர் K.சாந்தன் | R.S.கேசவமூர்த்தி | ஐ. சிவபாதம் |

## உலக திருக்குறள் மகாநாடு 7 ஆம் திகதி சென்னையில் ஆரம்பம்

உலகத் தமிழ் மறைக் கழகம் நடத்தும் 25வது உலகத் திருக்குறள் மாநாடு எதிர்வரும் 7 ஆம் திகதி சென்னையில் ஆரம்பமாகவுள்ளது.

சென்னை வசந்தமஹால் மண்டபத்தில் 9 ஆம் திகதி வரை மூன்று தினங்கள் இந்த மகாநாடு நடைபெறும்.

உலகத் தமிழ் மறைக் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

## பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவத் தாதியரும் சேவையில்!

யாழ். வைத்தியசாலையில் நீண்டகாலமாக நிலவி வரும் தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்காக 3 வருட பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய மாணவ தாதியர்கள் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தாதியியல் கற்கை நெறிகளை முடித்திருக்கும் இவர்கள் இறுதிப் பெறுபேறுகளை எதிர்பார்க்கின்றனர்.

சுமார் 150 மாணவத் தாதியர்கள் இம் மாதம் முதல் யாழ். வைத்தியசாலையில் கடமை புரிய அழைக்கப்பட்டுள்ளனர் 07

மிடையே நடந்த போர் நிறைவு பெற்ற இரண்டாவது ஆண்டு நிறைவு விழா கடந்த ஞாயிறு குவைத்தில் கொண்டாடப்பட்டது.

ஈராக்கில் தொடர்ந்தும் சதாம் ஹுசெயினின் ஆட்சியே நடைபெறுவதால் குவைத் மீது ஈராக் ஊடுருவும் ஆபத்து இன்னமும் முழுமையாக நீங்கிவிடவில்லை என குவைத் இளவரசரும் பிரதமருமான அல்சபா கூறியுள்ளார்.

குவைத்தில் மேலும் ஆயுதங்களையும் இராணுவ வீரர்களையும் அமெரிக்கா குவிக்க ஆரம்பித்திருப்பது ஈராக்கிற்கு எதிரான போருக்கான அறிகுறியென்று ஈராக் தொடர்ந்தும் எச்சரிக்கவே

இதனிடையே அமெரிக்கப் படைகளும் குவைத் படைகளும் இணைந்து 17 நாட்களுக்கு மேற்கொள்ளவுள்ள போர் ஒத்திகை நேற்று ஆரம்பமாகியது.

எதிர்வரும் 10 ஆண்டுகளுக்கு குவைத்தின் பாதுகாப்பை அமெரிக்கா உறுதி செய்யும் என உருவாக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத்தகைய இராணுவப் பயிற்சி நடத்தப்படுகிறது.

இதற்கிடையில் ஐ.நா. சபை எந்த புதிய தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும் அதனைத் தான் எதிர்க்கப்போவதாக ஈராக் அறிவித்துள்ளது.

## ஜூலை மாதத்தில் மட்டும் நாட்டில் 803 பேர் கொலை!

வன்செயல் காரணமாக கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் நாட்டில் 803 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அரசின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

இவர்களில் 692 பேர் வடக்குக் கிழக்குப் போரில் கொல்லப்பட்டனர். ஏனைய 111 பேரும் நாட்டின் ஏனைய பகுதிகளில் கொல்லப்பட்டனர்.

வடக்குக் கிழக்கில் கொல்லப்பட்டோரில் கணிசமானோர் படையினர் ஆவர். இவர்கள் புலிகளுடனான யுத்தத்தின் போது கொல்லப்பட்டார்கள்.

## பார்ஸிலோனா ஒலிம்பிக் - 92
### பதக்க விவரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சி. ஐ. எஸ். முன்னாள் சோவியத் குடியரசுகள் | 32 | 22 | 20 |
| அமெரிக்கா | 17 | 22 | 20 |
| ஜெர்மனி | 14 | 10 | 19 |
| சீனா | 11 | 16 | 08 |
| ஹங்கேரி | 10 | 07 | 02 |
| அவுஸ்திரேலியா | 06 | 08 | 07 |
| தென் கொரியா | 06 | 03 | 05 |
| ஸ்பெயின் | 06 | — | — |
| போலந்து | 03 | 04 | 06 |
| ஜப்பான் | 03 | 05 | 07 |
| கனடா | 05 | 01 | 05 |
| பிரான்ஸ் | 06 | 04 | 12 |
| இத்தாலி | 04 | 05 | 07 |
| பிரிட்டன் | 04 | 03 | 05 |
| கியூபா | 03 | 02 | 05 |
| துருக்கி | 02 | 01 | 01 |
| பல்கேரியா | 01 | 04 | 01 |
| ருமேனியா | 04 | 05 | 06 |
| செக்கோஸ்லேவேக்கியா | 02 | 02 | 01 |
| நோர்வே | 02 | 02 | — |
| எஸ்தோனிய குடியரசு | 01 | — | 01 |
| கிரேக்கம் | 01 | — | — |
| சுவீடன் | — | 03 | 03 |
| நியூசிலாந்து | 01 | 03 | 03 |
| நெதர்லாந்து | — | 02 | 06 |
| இஸ்ரேல் | — | 01 | 01 |
| பெரு | — | 01 | — |
| லத்வியா குடியரசு | — | 01 | 01 |
| சுயேட்சை (யூகோ) | — | 01 | 02 |
| பெல்ஜியம் | — | 01 | 02 |
| பின்லாந்து | — | — | 01 |
| மொங்கோலியா | — | — | 01 |
| சூரினாம் | — | — | 01 |
| பிரேசில் | 01 | 01 | — |
| ஜமெய்கா | — | — | 01 |
| நமீபியா | — | — | 01 |
| அல்ஜீரியா | — | — | 01 |
| வட கொரியா | 01 | — | 02 |
| டென்மார்க் | — | — | 02 |
| சுலோவேனியா குடியரசு | ... | — | 02 |

# ஒலிம்பிக் டெனிஸ் போட்டி
# ஸ்ரெபிகிராப் அரையிறுதிபோட்டிக்கு

ஒலிம்பிக் போட்டியில் நீண்ட தூர வீதி சைக்கிள் ஓட்டப் போட்டியில் இத்தாலி தங்கப் பதக்கம் பெற்றது. நெதர்லாந்து, லத்வியா முறையே வெள்ளி, வெண்கல பதக்கங்களை பெற்றன.

மகளிர் இரட்டையர் டேபிள் டெனிஸ் போட்டியில் சீனா தங்கப்பதக்கம், வெண்கல பதக்கங்களை பெற்றது.

மகளிர் நீண்ட தூரசைக்கிள் ஓட்டப்போட்டியில் தென் கொரியா தங்கம் வெள்ளி பதக்கங்களைப் பெற்றது.

மகளிர் தனிநபர் ஜிம்னாஸ்டிக் போட்டியில் தென்கொரியா தங்கம் வெள்ளி பதக்கங்களைப் பெற்றது.

மூவாயிரம் மீற்றர் மகளிர் ஓட்டப்போட்டியில் சி ஐ எஸ் கூட்டணி தங்கம், வெள்ளி பதக்கங்களைப் பெற்றது.

ஆண்கள் ஜிம்னாஸ்டிக் போட்டி ஒன்றில் சி எஸ் ஐ கூட்டணி தங்கத்தையும், வட கொரியா வெள்ளியையும், ஜேர்மனி வெண்கலத்தையும் பெற்றன.

8பேர் கொண்ட ஆண்கள் படகு போட்டியில் கனடா அணி வெற்றி பெற்றது.

உயரம் பாய்தலில் கியூபா வீரர் தங்கப்பதக்கம் பெற்றார்.

ஒலிம்பிக் மகளிர் ஒற்றையர் டெனிஸ் போட்டியில் உலகின் இரண்டாம் நிலை ஆட்டக்காரர் ஸ்ரெபி கிராப் அரையிறுதிப் போட்டியில் பங்கு பற்ற தகுதி பெற்றார். இவர் நேற்று டெக்ஜிய வீராங்கனையை நேர் செற்றில் தோற்கடித்தார்.

ஹொக்கி போட்டியில் பிரிட்டனை அவுஸ்திரேலியா 6;0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது.

சி. ஐ. எஸ். கூட்டணியைச் சேர்ந்த ஜிம்னாஸ்டிக் வீரர் விற்றாலி விசிபசேவ் (20) 6 தங்கப்பதக்கங்களை பெற்று ஓர் ஒலிம்பிக் சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இவர் சோவியத்தின் பேலோரஸ் குடியரசை சேர்ந்தவர்.

இதனிடையே குத்துச் சண்டையில் கம்பியூட்டர் மூலம் தோற்றவராக அறிவிக்கப்பட்ட அமெரிக்க வீரனின் மேன்முறையீடு நிராகரிக்கப் பட்டது.

கம்பியூட்டரில் புள்ளியிடும் மத்தியஸ்தர்கள் வேகமாக தொழிற்படும் போது தவறான பட்டனை அழுத்திய தன் மூலமாக கம்பியூட்டர் தவறான கணிப்பை செய்திருக்கலாம் என சில வட்டாரங்கள் கருதுகின்றன.

## இந்திய உப-ஜனாதிபதி தேர்தல் சுயேச்சை உறுப்பினர் போட்டி

இந்திய உப-ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் மற்றும் எதிர்கட்சிகளின் சார்பில் நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர் கே. ஆர். நாராயணனுக்கு எதிராக சுயேச்சை வேட்பாளர் ஒருவரும் போட்டியிடுகிறார்.

காகா ஜோகிந்தர்சிங் என்பவரே சுயேச்சையாக உப ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுபவராவார். வேட்புமனு விலக்கி கொள்ளும் இறுதி நாள் இன்றாகும்.

## ★ சுப்பிரமணியம் சுவாமி
## தமிழக அதிகாரிகள் சிலர் தம்போக்கில் செயற்பாடு

பல தமிழ் அகதிகள் மாநில ஆட்சியின் நிர்ப்பந்தத்தின் பேரில் செல்கின்றனர். இதை தடுக்க நான் ஐ நா அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு விரும்பி செல்பவர்களை அனுமதிக்குமாறு கோருவேன் என சுப்பிரமணியம்சுவாமி நேற்று பி. பி ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அமைச்சர் சபையின் பலவந்தமாக அனுப்பப்பட மாட்டார்கள் என உறுதியளித்தார். மாநில ஆட்சியின் சில அதிகாரிகள் தமது போக்கில் செயற்படுகின்றனர் என்றார் சுவாமி.

அகதிகளை பலவந்தமாக திருப்பியனுப்புவது தவறு என அவர் சுட்டிக்காட்டினார்.

## மறுவாழ்வு அதிகாரி ராமதாஸ் கூறுகிறார்
## அகதிகளை போர் நடக்கும் இடங்களுக்கு அனுப்பவில்லை

இலங்கையில் இன்னும் போர் தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் போரிலிருந்து தப்புவதற்கு தமிழ் நாட்டிற்கு தமிழ் அகதிகள் ஓடி வந்தார்கள். அவர்களை மீண்டும் இந்தப் போர் நடக்கும் இடத்துக்கு திருப்பியனுப்புவது பற்றி என்ன சொல்கிறீர்கள் என பி பி ஸி நிருபர் கேட்டார். அதற்குப் பதிலளித்த தமிழ் நாடு அகதிகள் மறுவாழ்வு அதிகாரி ராமதாஸ் "நாம் போர் நடக்கும் இடத்துக்கு அனுப்பவில்லை. திருகோணமலைக்கு அனுப்புகிறோம். மன்னார் தீவுக்கு அனுப்புகிறோம்.

இலங்கை இந்த இடமெல்லாம் "ஸிவியர்" ஆக இருக்கு என்று சொன்னதன் பின்பு மத்திய அரசுக்கு அறிவித்து மறுவாழ்வு நடவடிக்கை எடுக்கிறோம் என்றபின்பே அனுப்புகிறோம் என்றார்.

## ● சுப்பிரமணியம் சுவாமி கருத்து
## அகதிகள் திரும்புவதற்கு ஜெயலலிதா வெறுப்பே காரணம்

## அதிகாரிகள் நிர்ப்பந்தம்; அகதிகள் தகவல்

அகதிகளின் சுயவிருப்பு குறித்து விசாரிக்க ஐ. நா. அதிகாரிகள் சென்னை வர முன்பே அகதிகளை தாயகம் திருப்பி அனுப்பியமை குறித்து இந்துஸ்தான் முன்னணி என்ற அமைப்பு கண்டித்துள்ளது.

இது ஐ. நா அதிகாரிகளை சந்திக்கவும் திட்டமிட்டுள்ளது. மண்டபம் முகாமில் இருந்த 148 அகதி குடும்பங்களை இம் முகாமின் அதிகாரி டி. என் ரங்கசுவாமி கட்டாயப்படுத்தி வெளியேற்றியதாக இவ்வமைப்பு கண்டித்துள்ளது.

இராமநாதபுரம் சிறையில் வைக்கப்பட்டுள்ள 33 அகதிகளை தாயகம் திரும்பும்படியும் இல்லாவிடின் தொடர்ந்து சிறையில் இருக்க வேண்டி வரும் என எச்சரிக்கப்பட்டதாக அகதி ஒருவரை மேற்கோள்காட்டி பி.பி ஸி செய்தி தெரிவித்தது. இதில் 12 அகதிகள் தாயகம் திரும்ப சம்மதித்தனராம்.

ஆண்கள் இல்லாத சமயங்களில் அகதிமுகாமிலுள்ள பெண்களிடம் தாயகம் திரும்ப விரும்புகிறோம் என்ற விருப்பை தெரிவிக்கும் படிவத்தில் அதிகாரிகள் பலவந்தமாக கையெழுத்தை பெற்றதாக மற்றுமோர் அகதி குறிப்பிட்டார். இதை நாம் ஐ. நா அதிகாரிகளிடம் முறையிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நடுவர் மன்ற தீர்ப்பை கண்காணிக்க குழு நியமனம்

தமிழகத்துக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவிரி நீர் விடுவிப்பது தொடர்பாக நடுவர் மன்றம் வழங்கிய தீர்ப்பு அமுல் செய்யப்படுவதை கண்காணிக்க உத்தி

இது பற்றி அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ★ மலேஷியாவில் தடுத்துவைத்த எயர்லங்கா விமானம் விடுவிக்கப்பட்டது

மலேஷியாவில் கோலாலம்பூர் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எயர்லங்கா விமானம் நேற்று மாலை அங்கிருந்து புறப்பட அனுமதியளிக்கப்பட்டது.

கடந்த இரு நாள்களாக தடுத்து வைக்கப்பட்ட எயர்லங்கா விமானத்தை விடுவிக்கும் உத்தரவை மலேசிய நீதிமன்றம் நேற்று பிறப்பித்தது. மேன் முறையீடு விசாரணை முடியும் வரை எயர்லங்கா நிறுவனம் வைப்பிலிட்ட பணம் நம்பிக்கை நிதியமாக வைத்திருக்குமாறு நீதிமன்றம் அறிவித்தது.

சம்பந்தப்பட்ட பிரயாண முகவருக்கு எதிராக வழக்குதாக்கல் செய்யவுள்ளதாக குறிப்பிட்டார்.

1990இல் எயர்லங்காவும் மலேஷிய பிரயாண முகவர் நிலையமான மதியா டிரவல்லுக்கும் செய்யப்பட்ட ஒப்பந்தப்படி சவுதி பிரயாணசேவைக்கு எயர்லங்கா அமர்த்தப்பட்டது.

ஆனால் எயர்லங்கா இந்த சேவையை மேற்கொள்ள தவறியதையடுத்து அந்த மலேஷிய நிறுவனத்திற்கு எயர்லங்கா நஷ்டஈடு வழங்கவேண்டும் என மலேஷிய நீதிமன்றம்

## ராணுவ ஒத்திகை

குண்டு தகர்ப்புகளும் இரண்டாயிரம் அமெரிக்க துருப்பு

ருக்குமாறு நீதிமன்றம் அறிவித்தது

இது குறித்து கருத்து வெளியிட்ட எயர்லங்கா நிறுவனத் தலைவர் டங்ஸ்ரன் ஜெயவர்தனா இச்சம்பவத்தினால் எயர்லங்காவுக்கு ஏற்பட்ட அபகீர்த்திக்கும் பாதிப்பிற்கும் லங்கா நஷ்டஈடு வழங்கவேண்டும் என மலேஷிய நீதிமன்றம் உத்திரவிட்டது. இதற்கமைய கடந்த வாரம் கோலாலம்பூரில் வைத்து எயர்லங்கா விமானம் தடுத்து வைக்கப்பட்டது தெரிந்ததே.

## வளர்ந்தோர் கல்வித்திட்ட வாரஇறுதி ஆங்கில வகுப்பு

யாழ் கல்வித்திணைக்களத்தினர் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் வளர்ந்தோர் கல்வித்திட்டத்தின் கீழ் வார இறுதி ஆங்கில பாடநெறி ஒன்றினை வெகுவிரைவில் ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

பாடசாலையை விட்டு விலகிய இருபாலாரும் இப்பாடநெறியில் சேர்ந்து ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்ளலாம். இதில் சேர்ந்து படிப்போர் மாதந்தோறும் 25ரூபா செலுத்தவேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சி முடிவில் திணைக்களத்தினால் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடைவோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேர்ந்து ஆங்கில மொழியைக் கற்றுப் பயனடைய விரும்புவோர் மேற்படி பாடசாலை அதிபருடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் (18)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி கலவியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 04.08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## அகதிகள் திரும்புவதற்கு ஜெயலலிதா வெறுப்பே காரணம்

ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட ஒரு வெறுப்பு நிலை காரணமாகவே அகதிகளை திருப்பி அனுப்பும் விடயத்தை முடுக்கி விட்டுள்ளது என எம். பி. சுப்பிரமணியம் சுவாமி நேற்று பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

உள்நாட்டு போர் நடக்கும் போது அகதிகளை அங்கு அனுப்புவது அவர்களை பலியிடவே என இவ்வமைப்பின் மற்றுமோர் தலைவர் கண்டித்தார்.

அகதிகள் திருப்பி அனுப்புவது குறித்து தமிழக அரசின் அகதிகள் புனரமைப்பு அதிகாரி ராமதாசுடன் பி.பி.சி தொடர்பு கொண்ட போது அவர் முழுவதும் போக்கிலான தெளிவற்ற பதில்களையே வழங்கினார்.

அகதிகள் சுயவிருப்பில செல்கின்றனர் இந்துதான் முன்னணி அறிக்கை தவறு என்று அவர் கூறினார்

## ★ பம்பாய் பங்குசந்தை ஊழல் விசாரணையில் தலையீடு நரசிம்மராவ் மறுப்பு

பம்பாய் பங்கு சந்தை ஊழல் தொடர்பாக புலனாய்வு அதிகாரி மாதவன் மேற்கொண்ட விசாரணையில் பிரதமர் அலுவலக அதிகாரிகளோ அல்லது அமைச்சர்களோ தலையிடவில்லை என பிரதமர் நரசிம்மராவ் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

ஊழல் தொடர்பான விசாரணையை மந்தமாகவே கொண்டு செல்லுமாறு பிரதமர் அலுவலகம் புலனாய்வு அதிகாரியை நிர்ப்பந்தித்ததாகவும் இதுவே அந்த அதிகாரி அண்மையில் ஓய்வு பெற முன்வந்ததற்கு காரணம் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடந்த வாரம் குற்றஞ்சாட்டியிருந்தது தெரிந்ததே.

தீர்ப்பு அமுல் செய்யப்படுவதை கண்காணிக்க உத்தியோக பூர்வ குழு ஒன்று நியமிக்கப்படும்

இவ்வாறு இந்திய மத்திய நீர்வளத்துறை அமைச்சர் வி.சி. சுக்லா நேற்று லோக்சபையில் பேசும் போது கூறினார்

இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தமிழகம், கர்நாடகம், கேரளம், மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களுக்கு

### 1.2 அகதிகள்...

இதனிடையே தாயகம் திரும்பும் அகதிகள் சுயவிருப்பிலா திரும்புகின்றனர் என்பதை ஐ.நா. அதிகாரிகள் விசாரித்தறிவதற்காக தாம்பரம் பகுதியில் இடைக்கால தங்கும் முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

எனினும் ஐ.நா. அதிகாரிகள் இந்த முகாமிற்கு வந்து சேருவதற்கு முன்பே முதல் தொகுதி அகதிகள் நேற்று புறப்பட்டுவிட்டனர்.

புதுடில்லியில் உள்ள யூ.என்.எச்.சி.ஆர். அதிகாரி தலைமையிலான ஐ.நா குழு நேற்றிரவு தமிழகம் வந்து சேரும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

குவைத் துருப்புகளும் இரண்டாயிரம் அமெரிக்க துருப்புகளும் பங்கு பற்றும் இராணுவ ஒத்திகை நிகழ்ச்சி நேற்று குவைத்தில் ஆரம்பமானது.

குவைத்தை ஈராக் ஆக்கிரமித்து இரண்டாம் ஆண்டின் போது இந்த இராணுவ நடவடிக்கை நடைபெறுகிறது.

இந்த நடவடிக்கையானது மத்திய கிழக்கு நாடுகளுக்கு தேவைப்பட்டால் அமெரிக்க இராணுவ உதவி வழங்கும் என்பதை காட்டுகிறது என அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது

இந்நடவடிக்கையை ஈராக் கண்டித்துள்ளது.

### விடுதலை ..

நாம் விடுதலை பெறுவோம் எனவோ, எமது குடும்பத்தை காண்போம் என்றோ ஒரு நாளுமே எண்ணியிருக்கவில்லை.

யாழ்ப்பாண மக்கள் படும் அவல நிலைமைகள் விமான ஷெல் தாக்குதல்களால் இடம்பெற்ற அழிவுகள் குறித்து தென்பகுதி மக்களுக்கு விவரமாக எடுத்துக் கூறுவோம் எனவும் அவர் மேலும் சொன்னார். 16